



# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 01.04.2026 • மலர் 04 • இதழ்: 90 • Edition : Nagercoil • 01.04.2026 • Vol : 04 • Issue : 90 • Page : 4 • Rs. 5/-





### கேரளாவில்

# சிபிஎம் வெற்றி பெற பாஜக விரும்புகிறது

## ராகுல் காந்தி விமர்சனம்

திருவனந்தபுரம், ஏப். 1

கேரள சட்டப்பேரவைத் தேர்தலில் சிபிஎம் தலைமையிலான இடது ஜனநாயக முன்னணி வெற்றி பெற வேண்டும் என்று பாஜக விரும்புவதாக ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

கேரள சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு கன்னூரில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய காங்கிரஸ மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி, ''பாஜகவுக்கும் சிபிஎம்க்கும் இடையே மறைமுக கூட்டணி இருக்கிறது. இவ்விரு சக்திகளும் இணைந்துதான் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணியை எதிர்க்கிறார்கள்.

பிரதமர் எங்கு சென்றாலும், கோயில்கள், மதம், கடவுள்கள் குறித்துப் பேசுகிறார். ஆனால், கேரளாவுக்கு வரும்போது சபரிமலை கோயில் விவகாரத்தை அவர் எழுப்புவதில்லை. சிபிஎம் தலைவர்கள் சபரிமலை கோயிலில் இருந்து தங்கத்தை திருடியுள்ளார்கள். ஆனால், அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்து மதத்தின் பாதுகாவலர் என்று சொல்லிக் கொள்ளும் அவர், கேரளாவுக்கு வந்துவிட்டு சபரிமலை குறித்து எதுவும் பேசாமல் செல்கிறார்.

பிரதமர் நரேந்திர மோடி, கேரள முதல்வரை தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளார். கேரள முதல்வர் மீதான வழக்குகளில் மோடி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது முதல்வருக்கே தெரியும். காங்கிரஸ் கட்சி, மோடியை தாக்கிப் பேசுவதை நீங்கள் கேட்க முடியும். ஆனால், கேரள முதல்வர், பிரதமரை தாக்கிப் பேசுவதையோ, அல்லது பிரதமர், கேரள முதல்வரை தாக்கிப் பேசுவதையோ நீங்கள் ஒருபோதும் கேட்க முடியாது'' என தெரிவித்தார்.




தொடர்ந்து கோழிக்கோட்டில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய ராகுல் காந்தி, ''நாம் ஒரு நிலையற்ற, ஆபத்தான காலகட்டத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம். எரிபொருள் விலைகள் உயரப்போகின்றன. பணவீக்கம் அதிகரிக்கப் போகிறது. ஆனால், இதைச் சமாளிக்க என்ன செய்வது என்பது குறித்து மோடிக்கோ அல்லது கேரள முதல்வருக்கோ எந்த தெளிவும் இல்லை. எங்களின் முதல் நடவடிக்கை கேரள மக்களை பாதுகாப்பதாகவே இருக்கும்.

நாங்கள் கேரள பெண்களையும் அவர்களின் எதிர்காலத்தையும் பாதுகாக்கப் போகிறோம். ஐக்கிய ஜனநாயக முன்னணி ஆட்சிக்கு வரும் நாளில் இருந்து கேரளாவில் பெண்களுக்கான பேருந்து பயணம் இலவசமாக இருக்கும்.

கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் ஒவ்வொரு பெண்ணுக்கும் மாதம்தோறும் தனிப்பட்ட செலவுகளுக்காக ரூ.1,000 வழங்கப்படும். மூத்த குடிமக்களுக்கு ரூ.3,000 ஓய்வூதியமாக வழங்கப்படும்.

தொழில் தொடங்கவோ அல்லது தொழில் முனைவோராகமாறவோ விரும்பும் இளைஞர்களுக்கு ரூ.5 லட்சம் வரை வட்டியில்லா கடன் வழங்கப்படும். உம்மன் சாண்டி மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் என்ற புதிய திட்டத்தை நாங்கள் தொடங்க இருக்கிறோம். இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு குடும்பத்துக்குமான மருத்துவக்காப்பீடு ரூ.25 லட்சமாக இருக்கும்'' என்று தெரிவித்தார்.

### திருச்சியில்

## ஏப்ரல் 2 ம் தேதி விஜய் வேட்பு மனு தாக்கல்

சென்னை, ஏப். 1

தமிழக சட்டமன்ற தேர்தல் வரும் ஏப்ரல் 23ந்தேதி நடைபெறுகிறது. வாக்கு எண்ணிக்கை மே 4ந்தேதி நடைபெறுகிறது. சட்டமன்ற தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கியது. மனு தாக்கல் செய்ய ஏப்ரல் 6ந்தேதி கடைசி நாளாகும். வேட்புமனு தாக்கல் செய்ய மொத்தம் அவகாசம் குறைவாக இருப்பதால் முதல் நாளான நேற்று முதலே வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சட்டமன்ற தேர்தலையொட்டி முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், த.வெ.க. தலைவர் விஜய், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆகியோர் நேற்று முதல் நாளிலேயே வேட்பு மனு தாக்கல் செய்தனர்.



இந்தநிலையில், தவெக தலைவர் விஜய் சட்டசபை தேர்தலில் பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய தொகுதிகளில் போட்டியிடுகிறார். பெரம்பூர் தொகுதியில் நேற்று வேட்பு மனு தாக்கல் செய்த அவர் தேர்தல் பிரசாரத்தை தொடங்கினார்.

இந்தநிலையில் திருச்சி கிழக்கு தொகுதியில் விஜய் நாளை மறுநாள் ஏப்.2ம் தேதி வேட்பு மனு தாக்கல் செய்ய உள்ளார். அன்றைய தினம் பிரசாரம் மேற்கொள்ள உள்ளார்.

இதனையடுத்து பிரசாரம் மேற்கொள்ளும் இடங்களில் அனுமதி கேட்டு தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் தவெக சார்பில் மனு அளிக்கப்பட்டுள்ளது.

விஜய் வேட்புமனு தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகளை செங்கோட்டையன் மற்றும் கு.ப.கிருஷ்ணன் ஆகியோர் பார்வையிட்டனர்.

### கிருஷ்ணகிரி அருகே

## ஓடும் பேருந்தில் கல்லூரி மாணவியை கடத்த முயற்சி: வானதி சீனிவாசன் தாக்கு

கிருஷ்ணகிரி, ஏப். 1

பாஜக தேசிய மகளிரணி தலைவர் வானதி சீனிவாசன் தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:

கிருஷ்ணகிரி அருகே ஓடும் பேருந்தில் கல்லூரி மாணவியை கடத்த முயன்றதாக சமூக வலைத்தளங்களில் பரவி வரும் வீடியோ அதிர்ச்சி அளிக்கிறது. காதல் என்ற பெயரில் இளைஞர்கள் சிலர் பெண்கள் மீது வன்முறையை கையாள்வது சமீப காலங்களில் அதிகரித்து வருவது விடியா திமுக அரசு ஈவ்டீசிங் தடுப்புச் சட்டத்தினை எந்த அளவிற்கு மெத்தனப் போக்குடன் செயல்படுத்தி வருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டு. அம்மையார் ஜெயலலிதா தனது ஆட்சிக் காலத்தில் பெண்களின் பாதுகாப்பிற்காக கடுமையான சட்டங்களை செயல்படுத்தி குற்றங்களை இரும்புக் கரம் கொண்டு அடக்கினார்.



ஆனால் இப்போது உள்ள முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக வலைத்தளங்களிலும், கட்சிப் பணிகளிலும் கவனம் செலுத்தி மகளிர் பாதுகாப்பை கேள்விக் குறியாக்கி விட்டதுதான் மிச்சம். முன்பெல்லாம் இரவு நேரங்களில் தான் பெண்கள் வெளியே செல்ல அச்சப்படுவார்கள். ஆனால் இருண்ட திமுக ஆட்சியில் பகலிலும் பெண்களை நடமாட விடாமல் மீண்டும் 50 ஆண்டுகள் பின்னோக்கிய நிலைமையில் தமிழக பெண்களை முதல்அமைச்சர் கொண்டுவந்து விட்டு, வெல்லும் தமிழ்ப்பெண்கள் மாநாடு நடத்துவது கேலிக் கூத்தாக உள்ளது. மீண்டும் நம் வீட்டுப் பெண்கள் வீறுநடை கொள்ள, பயமின்றி நடமாட இந்த தேர்தலுடன் விடியா திமுக அரசை விரட்டுவோம்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## விஜய் ஒரு கனவு உலகில் இருக்கிறார் பியூஷ் கோயல்



சென்னை, ஏப். 1

சென்னை விமானநிலையத்தில் மத்திய மந்திரி பியூஷ் கோயல் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது'

"தமிழக மக்கள் மாற்றத்தை விரும்புகின்றனர். மறைந்த முன்னாள் முதல்அமைச்சர் ஜெயலலிதா ஆட்சியை மக்கள் விரும்புகின்றனர். வலிமையாக உள்ள தேசிய ஜனநாயக கூட்டணி, நிச்சயம் திமுகவை வீழ்த்தும். பெண்கள் விவசாயிகள், அனைவருக்குமான ஆட்சியை தேசிய ஜனநாயக கூட்டணி வழங்கும். ஊழல் கட்சிகளான திமுகவும், காங்கிரசு ஒன்று சேர்ந்துள்ளன.

தமிழ்நாட்டு மக்கள் குறித்தும், தமிழ்நாடு குறித்தும் எதுவும் தெரியாமல் விஜய் இங்கே பேசுகிறார். விஜய் ஒரு கனவு உலகில் உள்ளார். அவர் குறிப்பிட்ட வாக்குகளே பெறுவார். அண்மையில் விஜயகாந்த், கமல்ஹாசன் ஆகியோருக்கு 2,3 தொகுதிகளே கிடைத்தன. அதே நிலைதான் விஜய்க்கும் ஏற்படும்."

இவ்வாறு அவர் பேசினார்.

## வாரிசு அரசியலை புறந்தள்ளுவோம்.. நம்மை நாமே ஆள்வோம்...

### சீமானுக்கு இயக்குநர் சேரன் திடீர் ஆதரவு

சென்னை, ஏப். 1

வருகிற தேர்தலில் தி.மு.க, அ.தி.மு.க, த.வெ.க, நாம் தமிழர் கட்சி என 4 முனை போட்டி நிலவி வருகிறது. தமிழகம் முழுவதும் அரசியல் கட்சி தலைவர்களும், வேட்பாளர்களும் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

தேர்தல் தொடர்பாக இயக்குனர் சேரன் தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது.

எனக்கு சீமானும், அவரின் தம்பி, தங்கைகளும் சட்டசபை செல்ல வேண்டும் என தோன்றுகிறது... ஏனெனில் இவர்களின் நோக்கம் மக்களுக்கு நல்லது செய்வது, சமூக தீங்குகளை ஒழிப்பது, நல்வளர்ச்சி திட்டங்களை முன்னெடுப்பது,

ஊழல் குற்றங்கள் நடக்காமல் மக்களின் பணம் சூறையாடப்படாமல் தடுத்து அதை நல்ல திட்டங்களுக்கு பயன்படுத்த ஆலோசனைகள் வழங்குவது, எல்லா மேடைகளிலும் இவர் முழக்கம் எதிர்கால வாழ்வியல் பற்றியே



இருப்பதால் இவர்கள் சட்டமன்றத்தில் இருந்தே ஆகவேண்டும். ஆக்கப்பூர்வமாக சிந்திக்கும் ஆற்றலை கடந்த கால அரசுகள் கைவிட்டு விட்டு வெறும் இலவசங்களை ஆசை காட்டி வாக்கு வாங்கி தேர்தலில் முதலீடாக ஒவ்வொரு வேட்பாளரும் கோடிக்கணக்கில் செலவு செய்து விட்டு அதை நூறு மடங்காக எப்படி எடுப்பது என திட்டம் தீட்டும் அரசாகவே நாம் இதுவரை பார்த்திருக்கிறோம்.

கொள்ளையையும், அலட்சியங்களையும், போதை புழக்கத்தையும், வன்முறைகளையும் தட்டிக் கேட்க ஒரு அழுத்தமான குரல்கள் தேவை. அந்த குரல் சீமானின் குரலாகவும், சீமானின் தம்பி, தங்கைகளின் குரலாகவும் இருந்தால் அரசையும், அரசு அதிகாரிகளையும் நல்வழிப்படுத்தும் மேய்ப்பாளர்களாக மாறுவார்கள்.

ஆகவே இந்த தேர்தலில் நா.த.க வேட்பாளர்களில் யாரெல்லாம் தங்களது கருத்துக்களை முன்வைத்து அழுத்தமாக போராடுகிறார்களோ அவர்களை அடையாளம் காணுங்கள்,

அந்த குரல்கள் நமக்கான குரல்கள். வெற்றி பெற்று அவர்கள் உள்ளே சென்றால் நமக்குத்தான் நல்லது செய்யப்போகிறார்கள்.

### கள்ளக்குறிச்சி

## அதிமுக நகர செயலாளர் திடீர் ராஜினாமா.!

கள்ளக்குறிச்சி, ஏப் 1

கள்ளக்குறிச்சிதொகுதி அதிமுக வேட்பாளர் ராஜீவ்காந்தி அறிமுகம் மற்றும் செயல் வீரர் கூட்டம் நேற்று நடைபெற்றது. அப்போது, கள்ளக்குறிச்சி அதிமுக முன்னாள் எம்எல்ஏ அழகுவேல் பாபு அவர்களின் கணவரும், கள்ளக்குறிச்சி நகர செயலாளருமான பாபு, தனது பதவியை திடீரென ராஜினாமா செய்தார்.

தனது ராஜினாமா குறித்து மேடையில் அவர் பேசுகையில், "பல மன உலைச்சல் இருந்தாலும், கழகம் வெற்றி பெற வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இல்லை.



ஆனால் தொடர்ந்து நகர செயலாளராக பணியாற்ற எனக்கு மனமில்லை. என்னோடு பணியாற்றிய அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தம்பி, ராஜீவ் காந்தியை அனைவரும் சேர்ந்து வெற்றிபெறச் செய்ய வேண்டும். நன்றி."

இவ்வாறு அவர் கூறி, தனது பதவியை ராஜினாமா செய்தார். அதிமுக நகர செயலாளர்,

திடீரென தனது பதவியை ராஜினாமா செய்தது, கூட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.





தின தமிழ்

**நிருபர்கள் தேவை**

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

**தகுதிகள்**

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701

# விடுதலை சிறுத்தைகள் கட்சியின் திருப்பத்தூர் மாவட்ட, ஒன்றிய புதிய நிர்வாகிகளுக்கு வாழ்த்து



திருப்பத்தூர்:ஏப்:1

திருப்பத்தூர் மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட, ஒன்றிய புதிய நிர்வாகிகளை விசிக கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர்தொல். திருமாவளவன் அறிவித்தார்.

திருப்பத்தூர் மாவட்ட செயலாளர், வார்டு கவுன்சிலர் வெற்றிக்கொண்டான், மாநில தேர்தல் பணிக்குழு மாநில செயலாளர், மாவட்ட கவுன்சிலர் வழிகாட்டுதலில் புதிய பொறுப்பாளர்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர். கந்திலி மேற்கு ஒன்றிய பொருளாளர் விக்கி(எ)விக்னேஷ், மாவட்ட மகளிரணி துணை செயலாளர் (ஜோலார்பேட்டை தொகுதி) நந்தினி, மாவட்ட செய்தி தொடர்பாளர் பாஸ்கர்(எ) பகலவன், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் ஆனந்தன், மாவட்ட துணை செயலாளர் ஏ.ஜெ.சக்தி, இளஞ் சிறுத்தை எழுச்சிப் பாசறை மாவட்ட செயலாளர் திருமாவிமல், வாணியம்பாடி ஒன்றிய செயலாளர் சதிஷ்குமார், ஆகியோருக்கு மாற்று ஊடக மைய மாவட்ட தலைவர் மேடை நடன கலைஞர் ஆசிரியர் லட்சுமணன் மற்றும் கந்திலி மத்திய ஒன்றிய திமுக கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர், தமிழ்நாடு நாடகம் மற்றும் நாட்டுப்புறக் கலைஞர்கள் மாநில நலச் சங்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் தமிழ்நாடு அரசு விருதாளர் கலைவளர்மணி செ.ரஜினி புதிய பொறுப்பாளர்களுக்கு சால்வை மற்றும் மாலை அணிவித்து இனிப்பு வழங்கி சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் பாடகர் விஜய் மற்றும் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## தருமபுரி மாவட்டத்தில்

# திமுக கழக வேட்பாளர்களை ஆதரித்து உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்



தருமபுரி ஏப்ரல் 01

தருமபுரி மாவட்டத்தில் அரூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் அ. சண்முகம், பாப்பிரெட்டிபட்டி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் பி. பழனியப்பன், பாலக்கோடு சட்டமன்ற தொகுதி வேட்பாளர் டி. என். வி. செந்தில் குமார் ஆகிய திமுக வேட்பாளர்களை ஆதரித்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். திமுக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை எடுத்துக் கூறி வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்குகளை சேகரித்தார். இந்த கூட்டத்தில் திமுக மற்றும் கூட்டணி கட்சிகளின்மாநில, மாவட்ட, நகர, பேரூர், ஒன்றிய , கிளைக்கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## தென்காசி

# அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் பணி நிறைவு பாராட்டு விழா



தென்காசி, ஏப். 1

தென்காசி மாவட்டத்தில் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு அரசு மருத்துவமனைகளில் பணியாற்றி, இம்மாதம் ஓய்வு பெறவிருக்கும் மருத்துவர் பி. கே. ரத்தின பெத்முருகன் திங்கட்கிழமை, தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை கருத்தரங்கு மையத்தில் பணி நிறைவு பாராட்டு விழா நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சி, மருத்துவமனை கண்காணிப்பாளரும் தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்க மாநில செயலாளருமான மருத்துவர் ஜெஸ்லின் தலைமையில், மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர் கோவிந்தன் முன்னிலையில் நடைபெற்றது.

மருத்துவர் ரத்தினபெத்முருகனை கௌரவிக்கும் வகையில் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. இதில் சுமார் 102 மருத்துவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கத்தின் சார்பில், மருத்துவர் ஜெஸ்லின் பொன்னாடை போர்த்தி பரிசு வழங்கினார். மாவட்டச் செயலாளர் மருத்துவர் முகமது இப்ராகிம் வரவேற்று பேசினார். துணைச் செயலாளர்கள் மருத்துவர் கார்த்திக் அறிவுடை நம்பி மற்றும் மருத்துவர் ராஜலட்சுமி தொடர்ந்து வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

மருத்துவர் ரத்தினபெத்முருகன், அனைவரையும் வாழ்த்தி ஏற்புரை வழங்கினார்.

நிகழ்ச்சியில்கலந்து கொண்ட அனைத்து மருத்துவர்களுக்கும் சங்கத்தின் சார்பில் மதிய விருந்து வழங்கப்பட்டது.

முடிவில், மாவட்ட துணைத் தலைவர் மருத்துவர் கார்த்திக் அறிவுடை நம்பி நன்றியுரை வழங்கினார்.

## ஜெனோமிக் லைஃப்ஸ்டைல் கவுன்சலிங் சேவையை

# டாக்டர் மோகன்ஸ் டயாபட்டீஸ் ஸ்பெஷாலிட்டிஸ் சென்டர் அறிமுகம்



சென்னை, ஏப்ரல் 01

டாக்டர் மோகன்ஸ் டயாபட்டீஸ் ஸ்பெஷாலிட்டிஸ் சென்டர், மரபணு தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தனிநபருக்கேற்ப வாழ்க்கை முறை ஆலோசனைகளை வழங்கும் "ஜெனோமிக் லைஃப்ஸ்டைல் கவுன்சலிங் சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.

டைப்2 நீரிழிவு, உடல் பருமன் மற்றும் இதய நோய்கள் போன்ற மெட்டபாலிக் நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து, அவற்றை தடுக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் இந்த புதிய சேவை தொடங்கப்பட்டுள்ளது . இந்த நிகழ்வில் பேசிய மருத்துவமனையின் தலைவர் டாக்டர் வி. மோகன், "மருத்துவ சேவைகள் தற்போது பொதுவான சிகிச்சை முறையிலிருந்து துல்லிய மருத்துவம் நோக்கி வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன. மரபணு அறிவியலின் முன்னேற்றம் காரணமாக, ஒருவருக்கு எந்த நோய்களுக்கு அதிக அபாயம் உள்ளது என்பதை முன்கூட்டியே அறிந்து, அதற்கேற்ற வாழ்க்கை முறை மாற்றங்களை வழங்குவது இப்போது சாத்தியமாகியுள்ளது," என்றார்.

அவர் மேலும் கூறுகையில், "இந்தியாவில் நீரிழிவு மற்றும் உடல் பருமன் போன்ற நோய்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்நிலையில், ஜெனோமிக் லைஃப்ஸ்டைல் கவுன்சலிங் போன்ற புதுமையான முயற்சிகள், நோய்களை முன்கூட்டியே கணித்து தடுப்பதிலும், சுகாதார சேவைகளை வழங்குவதிலும் முக்கிய பங்காற்றும்," என்றார்.

மேலும் இம்மருத்துவமனையின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஆர். எம். அஞ்சனா பேசுகையில், " ஜெனோமிக் அபாய மதிப்பீடு மற்றும் திட்டமிட்ட வாழ்க்கை முறை மாற்றங்களை இணைக்கும் புதிய அணுகுமுறையாக ஜெனோமிக் லைஃப்ஸ்டைல் கவுன்சலிங் செயல்படுகிறது. இந்த திட்டத்தின் மூலம் நோயாளிகளுக்கு அவர்களின் மரபணு தன்மைக்கு ஏற்ப தனிப்பயன் உணவு திட்டம், உடற்பயிற்சி பரிந்துரைகள் மற்றும் வாழ்க்கை முறை வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகின்றன.

இதன் மூலம் மெட்டபாலிக் நோய்களின் அபாயத்தை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்து, அவற்றை தாமதப்படுத்தவும் அல்லது தடுப்பதற்கும் மக்களுக்கு உதவியாக இருக்கும், " என்றார்.

## திருவெண்ணெய்நல்லூர் பகுதிகளில்

# திருக்கோவிலூர் தொகுதி திமுக வேட்பாளர் பொன்.கௌதமசிகாமணிக்கு உற்சாக வரவேற்பு



திருவெண்ணெய்நல்லூர்.ஏப்.01

திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளராக பொன் கௌதம சிகாமணி அறிவிக்கப்பட்டதை அடுத்து திருவெண்ணெய்நல்லூர் பகுதி நிர்வாகிகளை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்க்கு ஆதரவு திரட்டினார். அப்போது அவருக்கு வழிநெடுகிலும் கட்சி நிர்வாகிகள் மேளதாளங்கள் முழங்க, பட்டாசு வெடித்து, மாலை அணிவித்து உற்சாக வரவேற்பு அளித்தனர். அதன்படி சித்தலிங்கமடம் கிராமத்தில் கிளை செயலாளர் சதீஷ்குமார் தலைமையிலும், டி.புதுப்பாளையம் கிராமத்தில் கிளை செயலாளர்சுந்தரமூர்த்தி தலைமையிலும், டி.எடையார் கிராமத்தில் துணைத் தலைவர் பீரங்கி குணா ஏற்பாட்டில் ஊரா ட்சி மன்ற தலைவர் சுந்தரமூர்த்தி தலைமையிலும், திருவெண்ணெய்நல்லூர் நகரத்தில் நகர செயலாளர் பூக்கடை கணேசன் தலைமையிலும், ஏனாதிமங்கலம் கிராமத்தில் ஒன்றிய சேர்மன் ஓம்சிவசக்திவேல் தலைமையிலும், செம்மார்கிராமத்தில் ஊராட்சி மன்ற தலைவர் ஷீபாராணி ஏழுமலை தலைமையிலும், மேலமங்கலம் கிராமத்தில் ஒன்றிய பொருளாளர் கிருஷ்ணமூர்த்தி, ஊராட்சி மன்ற தலைவர் மணிகண்டன் தலைமையிலும் மேலும் வளையாம்பட்டு பேரங்கியூர் உள்ளிட்ட பகுதிகளில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது பொன்.கௌதம சிகாமணி பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இந்த வரவேற்பின் போது முன்னாள் அமைச்சர் பொன்முடி எம்.எல்.ஏ., பி.வி.ஆர்.விசுவநாதன், கை.ரா.சடகோபன், பூக்கடை கணேசன், ஓம்சிவசக்திவேல், அஞ்சுகம் கணேசன், பக்தவச்சலம், கிருஷ்ணராஜ், வெங்கடேசன், ஏழுமலை, குமரவேல் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு வரவேற்பு அளித்தனர்.

## திருவெறும்பூர் அருகே

# திமுக கவுன்சிலர் வெட்டிப் படுகொலை தேர்தல் சமயத்தில் பரபரப்பு



திருவெறும்பூர், ஏப். 1

திருவெறும்பூர் அருகே கூத்தப்பார் பேரூராட்சி திமுக கவுன்சிலர் மர்ம நபர்களால் வெட்டி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த படுகொலை சம்பவம் அரசியல் விரோதத்தால் நடந்ததா அல்லது தொழில் போட்டியா என்ற கோணத்தில் போலீசார் விசாரணையை துவக்கி உள்ளனர்.

திருவெறும்பூர் அருகே உள்ள கூத்தைப்பார் பேரூராட்சிக்கு உட்பட்ட பாரதிபுரத்தை சேர்ந்தவர் அந்தோணிசாமி. இவரது மகன் ரஞ்சித்குமார் (38) இவர் கூத்தப்பார் பேரூராட்சியில் 11 வது வார்டு கவுன்சிலராகவும், திமுக கூத்தப்பார் பேரூர் கழக இளைஞரணி செயலாளராகவும் செயல்பட்டு வருகிறார்.

கூத்தப்பாரை சேர்ந்த ரஞ்சித்குமார் திருவெறும்பூர் அருகே உள்ள சோழமா நகரில் புதிதாக வீடு கட்டி அண்மையில் குடியேறியுள்ளார்.

மேலும், இவர் திருவெறும்பூர் அரசு ஐடிஐ எதிரே உள்ள அரசு மதுபான கடையின் பார் ஏலம் எடுத்து நடத்தி வந்தார்.

இந்த நிலையில் நேற்று இரவு தனது தொழில் பார்ட்னரை சந்தித்துவிட்டு இருசக்கர வாகனத்தில் சோழமாதேவி நோக்கி வீட்டுக்கு சென்று கொண்டிருந்தார்.

திருவெறும்பூரில் இருந்து நவல்பட்டு செல்லும் சாலையில் புதுத்தெரு அருகே ரஞ்சித்குமார் சென்றபோது, மர்ம நபர்கள் சிலர் அவரை வழி மறித்து கட்டையால் தாக்கி, பின்னர், அவரை அரிவாளால் தலை மற்றும் கால் தொடை பகுதியில் சரமாரியாக வெட்டி படுகொலை செய்து விட்டு தப்பி ஓடியுள்ளனர்.

தலைசிதைக்கப்பட்டு ரத்தவெள்ளத்தில் இறந்த நிலையில் கிடந்த ரஞ்சித்குமாரை அவ்வழியே சென்றவர்கள் பார்த்து விட்டு உடனடியாக நவல்பட்டு காவல்துறைக்கு தகவல் அளித்தனர்.

இது குறித்து தகவல் அறிந்த நவல்பட்டு போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து விசாரணை மேற்கொண்டனர்.

மேலும், இந்த தகவலை அறிந்த அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் சம்பவ இடத்திற்கு வந்து படுகொலை செய்யப்பட்டு இறந்து கிடந்த ரஞ்சித்குமாரின் உடலை பார்த்து கதறி அழுதனர்.

இதனிடையே நவல்பட்டு போலீசார் இறந்தவரின் உடலை கைப்பற்றி உடற்கூறு ஆய்விற்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், தடய அறிவியல், கைரேகை நிபுணர்கள் மற்றும் மோப்பநாய் வரவழைக்கப்பட்டு தடயங்களை சேகரித்தனர்.

திருச்சி மாவட்ட எஸ்பி செல்வ நாகரத்தினம், திருவெறும்பூர் ஏ எஸ் பி அரவிந்த் பனாவத் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை மேற்கொண்டனர். இச்சம்பவம் குறித்து நவல்பட்டு போலீசார் வழக்கு பதிவு கொலையாளிகள் யார்? எதற்காக கொலை செய்யப்பட்டார்? தொழில் போட்டி காரணமாக கொலை செய்யப்பட்டாரா? அல்லது வேறு ஏதேனும் காரணமா? அரசியல் முன் விரோதமா? என்பது குறித்து பல்வேறு கோணங்களில் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

தேர்தல் நேரத்தில் திருவெறும்பூர் திமுக பிரமுகர் வெட்டி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் திருச்சி அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## காரமடை தெற்கு ஒன்றிய அலுவலகத்தில்

# மேட்டுப்பாளையம் சட்டமன்ற திமுக வேட்பாளரின் நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம்





கோவை ஏப்:01

கோவை மாவட்டம், காரமடை தெற்கு ஒன்றியம் மருதூர் திமுக அலுவலகத்தில் நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் நடைபெற்றது.

தமிழகத்தில் நடைபெற இருக்கின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் திமுக சார்பில் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட எஸ்.எம்.டி.கவிதா கல்யாண சுந்தரம் அவர்கள் கட்சி நிர்வாகிகளுடன் சந்திப்பு ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்சி.ஆர்.ராமச்சந்திரன்தலைமையில் தெற்கு ஒன்றிய செயலாளர் டி.ஆர்.பிரதீப் வரவேற்பில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் புருஷோத்தமன், காரமடை ஒன்றிய செயலாளர்கள் சு.சுரேந்திரன், எஸ்.எம்.டி.கல்யாணசுந்தரம், எம். காந்தி, நகர செயலாளர்கள் பா.முனுசாமி, அஷ்ரப் அலி, குருபிரசாத், தலைமை பொதுக்குழு உறுப்பினர் பிரஸ்குமார், காரமடை ஒன்றிய துணைச் செயலாளர் ஆலயம் பாலு, சார்பு அணி நிர்வாகிகளான இளைஞரணி அமைப்பாளர் ஹக்கீம், ஆதிதிராவிடர் நலக்குழு அணி து. தலைவர் பன்னீர்செல்வம், தொழிலாளர் அணி கிரி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். இக்கூட்டத்தின் வாயிலாக வேட்பாளர் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் திமுக வெற்றி பெற நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம் என கேட்டுக் கொண்டார்.

# பணி நிறைவு பாராட்டு விழா




சென்னை, ஏப். 1

சென்னை பெருநகர காவல்துறையில், 41வருட காலமாக சிறப்பாக பணியாற்றி வந்த, டிராபிக் உதவி ஆய்வாளர் மு.காசி விஸ்வநாதன் அவருக்கு, காவல் துறையில் இருந்து பணி நிறைவு பெறுகிறார். அவருக்கு பணி நிறைவு பாராட்டு விழா திரு.வி.க நகர் பேருந்து நிலையம் எதிரில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் திருமணமண்டபத்தில்,நடைபெற்றது.இந்நிகழ்ச்சியில் செம்பியம் ஏசி ஜெயக்குமார், மற்றும் ஆவடி போக்குவரத்து உதவி ஆய்வாளர் உமாபதி அவருக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனரார், மேலும் அவருடன் பணியாற்றிய, காவல்துறை சக ஊழியர்கள், நண்பர்கள்,உறவினர்கள்கலந்துகொண்டுசிறப்பித்தனர்.



# மணப்பாறை: ஸ்டேஷனரி கடையில் பயங்கர தீ விபத்து

திருச்சி, ஏப். 1

மணப்பாறையில் ரயில்வே சாலையில் தர்மராஜ் என்பவருக்கு சொந்தமான பிரிண்டர்ஸ் மற்றும் ஸ்டேஷனரி கடை இன்று (மார்ச் 31) காலை திடீரென தீப்பற்றி எரிந்தது. அக்கம்பக்கத்தினர் அளித்த தகவலின் பேரில் மணப்பாறை தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். தீ கொழுந்துவிட்டு எரிந்ததால், வையம்பட்டியில் இருந்து கூடுதல் தீயணைப்பு வாகனம் வரவழைக்கப்பட்டு தீயை கட்டுப்படுத்தும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.



தருமபுரி கடைவீதியில் அமைந்துள்ள ஸ்ரீ அம்பிகா பரமேஸ்வரி உடனாகிய மருதவாணேஸ்வரர் திருக்கோவிலில் பிரதோஷத்தை முன்னிட்டு சாமிக்கு சிறப்பு அபிஷேகங்கள், ஆராதனைகள் நடைபெற்றது. சிறப்பு அலங்காரத்தில் சுவாமி பக்தர்கள் காட்சி அளித்தார் .திருக்கோவில் சார்பில் பக்தர்களுக்கு பிரசாதங்கள் வழங்கப்பட்டது

## புதுக்கடை அருகே

# 2 குழந்தைகளை தவிக்க விட்டு இளம் பெண் மாயம் போலீசில் புகார்

புதுக்கடை, ஏப்.1

புதுக்கடை அருகே பைங்குளம் பகுதியை சேர்ந்தவர் ஷிபு (38). வெல்டிங் தொழிலாளி. இவருக்கு 2018ல் இந்துஜா (30)என்ற பெண்ணுடன் திருமணம் நடந்தது. இந்த தம்பதிக்கு 7 வயதில் இவானி என்ற மகளும், 6 வயதில் ஸ்வானிக் என்ற ஆண் பிள்ளைகளும் உள்ளனர். இந்த நிலையில் சம்பவத்தன்று ஷிபு வேலைக்கு சென்று விட்டு மதியம் வீட்டுக்கு வந்தபோது வீட்டில் இருந்த மனைவியை காணவில்லை. இரண்டு குழந்தைகள் மட்டும் வீட்டில் இருந்துள்ளனர். மனைவியை பல்வேறு இடங்களில் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதையடுத்து ஷிபு புதுக்கடை போலீசில் மனைவியை கண்டுபிடிக்க கேட்டு புகார் செய்தார். போலீஸ் .இன்ஸ்பெக்டர் மாடசாமி வழக்கு பதிவு செய்து மாயமான இந்துஜாவை தேடி வருகின்றனர்.

## தென்தாமரைகுளம் அருகே

# கோவில் பின்புறம் கிடந்த பிறந்து சிலமணி நேரமான பெண்குழந்தை நர்சிங் மாணவி, காதலனுடன் கைது



தென்தாமரைகுளம்., ஏப்., 01

தென்தாமரைகுளம் அருகே உள்ள ஒரு கோவிலின் பின்புறம் புதரில் பிறந்து சில மணி நேரம் ஆன பெண் குழந்தையை வீசி சென்ற நர்சிங் மாணவியை காதலனுடன் போலீசார் கைது செய்தனர். ஞாயிற்றுகிழமை பொற்றையடி அருகே உள்ள கரம்பவிளையில் ஒரு கோவிலின் பின்புறம் புதரில் சில மணி நேரமான பெண் குழந்தை ஒன்று கிடப்பதாக அப்பகுதியை சேர்ந்த பெண் ஒருவர் கன்னியாகுமரி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தில் பாதுகாவலராக பணிபுரிந்து வரும் ராஜேஷ் குமார் என்பவருக்கு தகவல் கொடுத்துள்ளார்.

இது குறித்து ராஜேஷ்குமார் தென்தாமரைகுளம் காவல்நிலையத்தில் புகார் அளித்தார். இதையடுத்து விரைந்து வந்த போலீசார் குழந்தையை மீட்டு ஆசாரிபள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். அங்கு பரிசோதித்த டாக்டர்கள் குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிறந்து சில மணி நேரம் ஆன குழந்தையை புதரில் வீசி சென்றது யார் என்ற விபரம் தெரியவில்லை. இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து அந்த குழந்தையை புதரில் போட்டு விட்டு சென்றது யார் என விசாரணை நடத்தி வந்தனர். இந்நிலையில் அந்தக் குழந்தையை வீசி சென்றது யார் என்ற தகவல் போலீசருக்கு கிடைத்துள்ளது.இது குறித்து போலீசார் கூறியதாவது. குழந்தையை புதரில் வீசி சென்றது யார் என விசாரணை நடத்தியதில் அந்தக் குழந்தையை போட்டது கரம்பவிளையை சேர்ந்த பாலன் என்பவரது மகள் ரெஜினா வயது 20 என்பது தெரியவந்தது. இவரது தந்தை இறந்து விட்டார். மேலும் விசாரணை நடத்தியதில் அவர் நர்சிங் படிப்பு படித்து வருவதாகவும். இவருக்கும் திருநெல்வேலி மாவட்டம் ஏர்வாடி அருகே உள்ள திருக்குறுங்குடியை சேர்ந்த முகேஷ் வயது 25 என்பவருக்கும் சுமார் நான்கு வருடங்களுக்கு முன்பு பழக்கம் ஏற்பட்டு காதலித்து வந்தவர்கள் கணவன் மனைவி போல் வாழ்ந்து வந்துள்ளனர். இதில் ரெஜினா கர்பமடைந்துள்ளார். இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை காலை கரம்ப விளையில் உள்ள வீட்டில் கழிப்பறையில் வைத்து பெண்குழந்தை பிறந்துள்ளது.

இதுகுறித்து முகேஷ் க்கு தகவல் கொடுத்துள்ளார். அவர் இந்த குழந்தை நமக்கு வேண்டாம் அதை வெளியில் எங்காவது போட்டுவிட்டு வந்துவிடு நாம் இருவரும் எங்கேயாவது போய்விடுவோம் என முகேஷ் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து அந்த குழந்தையை ஒரு பக்கெட்டில் வைத்து கோவிலின் பின்புறத்தில் உள்ள புதரில் போட்டுவிட்டு வந்து விட்டார். இந்நிலையில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை அவர்கள் இருவரும் வேறு இடத்திற்கு தப்பி செல்ல முயன்ற போது ஈத்தங்காடு அருகே வைத்து போலீசாரிடம் சிக்கிக்கொண்டனர் அவர்களை கைது செய்த போலீசார் கோர்ட்டில் ஆஜர் படுத்தி நாகர்கோவில் சிறையில் அடைத்தனர்.

## திருவெண்ணெய்நல்லூரில்

# கிருபாபுரீஸ்வரர் கோவில் தேர் திருவிழா: ஏராளமான பக்தர்கள் தேரை வடம் பிடித்து சாமி தரிசனம்



திருவெண்ணெய்நல்லூர், ஏப்.01

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூரில் மிகவும் பிரசித்தி பெற்ற மங்களாம்பிகை சமேத கிருபாபுரீஸ்வரர் கோவில் உள்ளது. இக்கோவிலில் ஆண்டுதோறும் பங்குனி மாதத்தில் பிரம்மோற்சவ விழா நடப்பது வழக்கம். இதன்படி இந்த ஆண்டிற்கான விழா கடந்த மாதம் 23ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. பின்னர் ஒவ்வொரு நாள் நடைபெறும் திருவிழாவில் சுவாமிக்கு சிறப்பு பூஜைகள் செய்து மேள, தாளங்கள் முழங்க கோபுர தரிசனம் வீதி உலா நடைபெற்று வந்தது. இதையடுத்து கடந்த 28ந் தேதி திருக்கல்யாண நிகழ்ச்சி நடைபெற்றது. முக்கிய விழாவான தேர் திருவிழா நேற்று நடைபெற்றது. காலை 10:30 மணியளவில் உற்சவர் கிருபாபுரீஸ்வரர் மங்களாம்பிகை தம்பதி சமேதராக தேரில் அலங்கரிக்கப்பட்டு சிவவாத்தியங்கள் முழங்க தேர்திருவிழா நடைபெற்றது. தேரினை பொதுமக்கள், பக்தர்கள் வடம் பிடித்து மாட வீதி வழியாக ஊர்வலமாக சென்று பின்னர் கோவிலை சென்றடைந்தது. இன்று 01ந் தேதி பங்குனி உத்திர தீர்த்தவாரி நிகழ்ச்சியும், நாளை 02ந் தேதி சண்டிகேஸ்வரர் உற்சவத்துடன் பிரமோற்சவ விழா நிறைவடைகிறது. விழா ஏற்பாடுகளை இந்து சமய அறநிலைய துறை அதிகாரிகள், உற்சவதாரர்கள் மற்றும் ஊர் பொது மக்கள் செய்திருந்தனர். விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## பொள்ளாச்சியில் திருநங்கைகள் மற்றும் திருநம்பிகள் இணைந்து

# மத்திய அரசு "திருநர் பாதுகாப்பு உரிமை திருத்த சட்டத்தை" வாபஸ் பெற வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம்



கோவை ஏப். 1

திருநர்சமூகத்தின் உரிமைகளை பறிக்கும் வகையில் கொண்டு வரப்பட்டுள்ள சட்ட திருத்தத்திற்கு எதிராக, மத்திய அரசை கண்டித்து பொள்ளாச்சி திருவள்ளுவர் திடலில் நூற்றுக்கணக்கானோர் ஒன்று கூடி தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

சமூக செயற்பாட்டாளர் கல்கி சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பிரியா பாபு, அப்சரம்மா,ஜோதியம்மா, உஷா, யாஸ்மின், மீரா உள்ளிட்ட பலர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு, “திருநர் உரிமை பாதுகாப்பு திருத்த சட்டத்தை வாபஸ் பெறு!” எனக் கோஷமிட்டனர்.

ஆர்ப்பாட்டமானது பதாகைகள், குரல் முழக்கங்கள், வண்ண ஓவியங்கள் மூலம் தங்களது எதிர்ப்பை வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள், “திருநங்கைகளின் அடையாளத்தை பறிக்கும் இந்த சட்டத்திற்கு ஜனாதிபதி ஒப்புதல் அளித்தது துரதிஷ்டவசமானது, இந்த சட்டத்தை வாபஸ் பெற வேண்டும்!” என்றும் திருநர் சமூகத்தின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

இந்த போராட்டம், திருநர் சமூகத்தின் உரிமை பாதுகாப்புக்கான உறுதியான குரலாகவும், அரசின் சட்ட திருத்தத்திற்கு எதிரான வலுவான எதிர்ப்பாகவும் அமைந்தது. SFI அமைப்பினர் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

## புதுக்கடை அருகே

# வீட்டில் மது விற்ற பெண் 26 பாட்டில்கள் பறிமுதல்

புதுக்கடை, ஏப். 1

புதுக்கடை அருகே மேலங்கலம் பகுதியை சேர்ந்தவர் வசந்தகுமாரி (67). இவர் அந்த பகுதியில் அரசின் அனுமதி இன்றி மது பானங்கள் விற்பனை செய்வதாக புதுக்கடை போலீசருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில் புதுக்கடை சப் இன்ஸ்பெக்டர்ஜான்ரோஸ் அந்தபகுதியில்நேற்றுரோந்துபணியில்ஈடுபட்டிருந்தார். அப்போது வசந்தகுமரியின் வீட்டு அருகே மறைத்து வைத்திருந்தஅரசுமதுபானங்கள்180மில்லிகொள்ளளவு கொண்ட 26 மது பாட்டில்கள் களை போலீசார் கண்டுபிடித்து அவற்றை பறிமுதல் செய்தனர். இதையடுத்து அவர் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# லால்குடி நடிகர் மன்சூர் அலிகான் வேட்பு மனு தாக்கல்



திருச்சி, ஏப். 1

இந்திய ஜனநாயக புலிகள் அமைப்பின் தலைவரும் நடிகருமான மன்சூர் அலிகான், திருச்சி மாவட்டம் லால்குடி சட்டமன்ற தொகுதியில் சுயேச்சையாக போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை லால்குடி கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் ஶ்ரீதரிடம் தாக்கல் செய்தார். இதன் மூலம் அவர்லால்குடி தொகுதியில்தனது அரசியல் பயணத்தை தொடங்கியுள்ளார்.

## திருப்பூர் வடக்கு சட்டமன்றம்

# தேசிய ஜனநாயக கூட்டணியின் வேட்பாளர் அறிமுக கூட்டம்!!



திருப்பூர்:ஏப்01

வருகின்ற சட்டமன்றம் தேர்தலை முன்னிட்டு பாரதிய ஜனதா கட்சி திருப்பூர் வடக்கு மாவட்டம் KCMB சீனிவாசன்தலைமையில்தேசியஜனநாயககூட்டணியின் அதிமுக வேட்பாளர் எம் எஸ் எம் ஆனந்த் அறிமுக கூட்டம் நடைபெற்றது.

திருப்பூர் வடக்கு சட்டமன்ற அதிமுக எம்எல்ஏ விஜயகுமார் மாநிலச் செயலாளர் மலர்கொடி மாநில செயற்குழு உறுப்பினர் சின்னச்சாமி மாவட்ட பொது செயலாளர் கலாமணி மாவட்ட பொருளாளர் ரவி மாவட்டச் செயலாளர் ராஜ்குமார் மற்றும் மண்டல தலைவர்கள் அணி பிரிவு நிர்வாகிகளும் தலைவர்களும் தொண்டர்களும் திரளானோர் கொங்கு மெயின் ரோடு தனியார் திருமண மண்டபத்தில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

# போக்குவரத்து மாற்றம்

## திருச்சி கலெக்டர் அறிவிப்பு



திருச்சி, ஏப். 1

திருச்சி மதுரை சாலையில் உள்ள கோரையாற்று பாலத்தை இடிக்கும் பணிகள் ஏப்ரல் மூன்றாம் தேதி தொடங்க உள்ளதால், அப்பகுதியில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மத்திய பேருந்து நிலையத்திலிருந்து பஞ்சப்பூர் செல்லும் வாகனங்கள் அரிஸ்டோ பாலம், மண்ணார்புரம் வழியாக செல்ல வேண்டும். மறு மார்க்கத்தில் செட்டியப்பட்டி, எடமலைப்பட்டி புதூர் வழியாக மத்திய பேருந்து நிலையம் செல்ல வேண்டுமென ஆட்சியர் சரவணன் தெரிவித்துள்ளார்.

# விழிப்புணர்வு கோலங்கள்



திருப்பூர்:ஏப்01

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 நடைபெறுவதையொட்டி மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சியாளர்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட 101 தாராபுரம் (தனி), 102 காங்கேயம், 112 அவிநாசி( தனி), 113 திருப்பூர் (வடக்கு), 114 திருப்பூர் (தெற்கு), 115 பல்லடம், 125 உடுமலைப்பேட்டை, 126 மடத்துக்குளம் ஆகிய 8 சட்டமன்ற தொகுதிகளுக்கு நடைபெறவுள்ளதையொட்டி மாவட்டம் முழுவதும் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

விழிப்புணர்வு கோலங்களைப் பார்வையிட்டார்கள். தொடர்ந்து, மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே தலைமையில் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் சந்திரமோகன், மாவட்ட விளையாட்டு அலுவலர் ரகுகுமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் செ.கு.சதீஸ்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் உதவி இயக்குநர் (பயிற்சி) ஹர்ஷா, திருப்பூர் சிக்கண்ணா கலைக்கல்லூரி முதல்வர் கிருஷ்னண், பேராசிரியர்கள் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## புதூரில்

# மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம்



விளாத்திகுளம் ஏப் 01

தூத்துக்குடி மாவட்டம் புதூர் பத்திரகாளி அம்மன் கோவில் அருகே மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பாக நடைபெற்ற தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் திமுக வேட்பாளரும் தற்போதைய விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினருமான மார்கண்டயேன் பேசுகையில்

நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டில் இருந்து வரும் தலைவர்களை பார்த்து மாபெரும் தலைவர்கள் என்று சொல்வார்கள் ஆனால் ஒரு கூட்டணியை கூட அண்ணா திமுக கட்சியால் முடிக்க முடியவில்லை, டெல்லியில் வைத்து முடிக்க கூடிய அளவில் தான் பயந்து பயப்பட வச்சிட்டாங்க. அந்தம்மா மோடியா? லேடியா? னு கேட்டுச்சு, இங்கே எல்லாம் பார்த்தா மோடி தான் எங்க டாடி ங்க னு, அண்ணா திமுகவின் நிலைமை இப்படி ஆகிவிட்டது, அதனால்தான் சொல்கிறேன் அண்ணா திமுக 50 துண்டுகளாக உடைந்து போய் உள்ளது,திமுக ஒரே சக்தியாக இருக்கிறது. திமுக கூட்டணி கட்சிக்காரர்கள் ஒரே உணர்வோடு இருக்கிறார்கள், இங்கு இருக்கக்கூடிய வாக்காளர் பெருமக்களை அனைவரையும் அரவணைக்கிறோம். எடப்பாடி 2000 ரூபாய் தருகிறோம் என்று சொல்கிறார், ஏற்கனவே நாம் 2000 ரூபாய் கொடுத்து விட்டோம். 1000 ரூபாய் ஏப்ரல் மாதம் கொடுத்து விட்டோம்,மே மாதத்திற்கு உங்களின் அக்கவுண்டில் 2000 ரூபாய் போட்டு விட்டோம். அதிமுகவினர் சொல்லத்தான் செய்வார்கள், நாம் செய்து விடுவோம் என்று பேசினார்.

நடைபெற்ற தெருமுனைப்பிரச்சாரக் கூட்டத்தில் திமுக ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ்,மும்மூர்த்தி, ராதாகிருஷ்ணன், வார்டு கவுன்சிலர் வெற்றிவேலன், தொழிலதிபர் வாசுதேவன் உள்ளிட்ட பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.





கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், காமன்தொட்டி கோபசந்திரம் தட்சண திருப்பதி அருள்மிகு வெங்கட்ரமண சுவாமி திருக்கோயில் தேரோட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் சாமி தரிசனம் செய்து, துவக்கி வைத்தார். உடன், இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் .ராமுவேல், வட்டாட்சியர் .ரமேஷ், ஆய்வாளர் .சக்தி, அறங்காவல் குழு தலைவர், ஆலய திருப்பணிக்குழு நிர்வாகிகள் .ஆர். நாராயணசாமி, .கே.வெங்கடேஷ், .ஆர்.கிருஷ்ணப்பா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## கடையநல்லூரில்

# அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி 5 தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம்




தென்காசி ஏப்ரல் 1

தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் நடைபெற இருக்கும் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலையொட்டி தென்காசி மாவட்டத்தில் உள்ள ஐந்து தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து அஇஅதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். தேர்தல் பிரச்சாரத்தில் பரப்புரையாற்றிய எடப்பாடி பழனிச்சாமி அதிமுக தலைமையிலான தே.ஜ. கூட்டணியில் அங்கம் வகிக்கும் கழகத்தின் கடையநல்லூர் தொகுதி வெற்றி வேட்பாளர் குட்டியப்பா என்ற கிருஷ்ணமுரளி, தென்காசி தொகுதி வேட்பாளர் செல்வமோகன்தாஸ் பாண்டியன், ஆலங்குளம் தொகுதி வேட்பாளர் கே.ஆர்.பி. பிரபாகரன், சங்கரன்கோவில் தொகுதி வேட்பாளர் டாக்டர் திலீபன் நிறுத்தப்பட்டிரு க்கிறார்.

இவர்கள் அனைவருக்கும் இரட்டை இலை சின்னத்தில் வாக்களியுங்கள் வாசுதேவநல்லூர் தொகுதியில் பாஜக வேட்பாளருக்கு தாமரை சின்னத்தில் வாக்களியுங்கள் தென்காசி மாவட்டத்தில் ஐந்து தொகுதிகளையும் வென்று அதிமுகவின் கோட்டையாக மாற்றுங்கள் அதிமுக ஆட்சி வந்தவுடன் நெல்லை மாவட்டத்தைப் பிரித்து தென்காசியை புதிய மாவட்டமாக உருவாக்கினோம் அதில்தான் இந்த 5 தொகுதிகள் இடம் பெற்றுள்ளன மாவட்டத்தைப் பிரிப்பதால் நிர்வாகத்தில் எளிமையாக தேவையான காரியங்கள் நிறைவேற்ற முடியும் அதிமுக தேர்தல் அறிக்கையை திமுக காப்பியடித்திருக்கிறது அதிமுக ஆளுங்கட்சியாக வந்தவுடன் செய்பவை பற்றி அறிவித்தது. அந்த பிரமாண்டமான அறிவிப்புகளைப் பார்த்து திமுகவும் அறிவித்துள்ளனர்.8 ஆயிரம் ரூபாய்க்கு கூப்பன் கொடுப்பார்களாம் உங்களுக்குத் தேவையான பொருட்கள் என்னென்ன வென்று அவர்களே சொல்லிவிட்டனர் ஏனெனில் அவர்கள் ஏஜென்சி எடுத்திருப்பார்கள் டோக்கன் திமுககாரரிடம் வாங்க வேண்டும் அதுக்கு லஞ்சம் கொடுக்க வேண்டும் ஆனால் அதிமுக ஆட்சிக்கு வந்தவுடன் 10 ஆயிரம் ரூபாய் நேரடியாக வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஃப்ரிட்ஜ் வழங்கப்படும் விலையில்லா பருப்பு எண்ணெய் வழங்கப்படும் பெண்களுக்கு அம்மா இரு சக்கர வாகனம் 5 லட்சம் பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

இப்போது எலெக்ட்ரிக் ஸ்கூட்டர் 35 ஆயிரம் தான் நீங்கள் 10 ஆயிரம் ரூபாய் கொடுத்தால் போதும் தீபாவளி தோறும் பெண்களுக்கு பட்டுச்சேலை வழங்கப்படும் ஆண்களும் நகரப் பேருந்தில் கட்டணம் இல்லாமல் பயணிக்கலாம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 3 சிலிண்டர் மானியமாக வழங்கபடும். பட்டப்படிப்பு படித்து பதிவுசெய்த இளைஞர்களுக்கு மாதம் 2 ஆயிரம் ரூபாய், +2 வரை படித்தவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். மாணவர்களின் கல்விக்கடன் ரத்து செய்யப்படும். 100 நாள் வேலைத் திட்டத்தை அதிமுக கொடுத்த அழுத்தம் காரணமாக 125 நாளாக உயர்த்தியுள்ளனர் அது 150 நாளாக உயர்த்தப்படும். திமுக ஆட்சியில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. பொய் சொல்லி வாக்கைப் பெற்று ஆட்சிக்கு வந்தவர்களுக்கு இந்த தேர்தல் மூலம் பதிலடி கொடுங்கள் என்று பொதுமக்களிடம் தேர்தல் பிரச்சாரத்தில் பரப்புரையாற்றினார்.

## மாட்டுவண்டியில் ஏர் கலப்பையை சுமந்தவாறு

# தாரை தப்பட்டை அடித்து வேட்பு மனு தாக்கல் செய்ய வந்த நாம்தமிழர் வேட்பாளர்

விளாத்திகுளம் ஏப். 1

வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டுதூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் பாலாஜி வேட்பு மனு தாக்கல் செய்வதற்காக, விளாத்திகுளம் ஆற்றுப்பாலத்தில் இருந்து ஏராளமான நாம் தமிழர் கட்சியினருடன் விவசாயிகளின் அடையாளமான மாட்டு வண்டியில் ஏர் கலப்பையை சுமந்தவாறு தாரை தப்பட்டை அடித்து ஆரவாரத்துடன் ஊர்வலமாக விளாத்திகுளம் வட்டாட்சியர் அலுவலகம் நோக்கி வந்தனர். தேர்தல் நடத்தை விதியின் காரணமாக வேட்பு மனு தாக்கல் செய்யும் விளாத்திகுளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து சுமார் 100 மீட்டர் தொலைவிற்கு அரசியல் கட்சி வாகனமோ, அரசியல் கட்சியினர் கூட்டமாகவோ செல்லக்கூடாது என்று காவல்துறையினர் தடுத்து நிறுத்தியதால், நாம்தமிழர் கட்சி



வேட்பாளர் பாலாஜி உட்பட நான்கு பேர் மட்டும் விளாத்திகுளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் உஷாவிடம் வேட்பு மனுவை பூர்த்தி செய்து வேட்பு மனுவை தாக்கல் செய்தனர். பொறியியல் பட்டதாரியான (B.E.) நாம்தமிழர் கட்சி வேட்பாளர் பாலாஜி கடந்த 2021 சட்டமன்ற தேர்தலில் இதே விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதியில் நாம் தமிழர் கட்சியில் போட்டியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஊத்தங்கரை அதியமான் பப்ளிக் பள்ளியில்

# மழலையர் பட்டமளிப்பு விழா!

கிருஷ்ணகிரி, ஏப். 1




கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அதியமான் பப்ளிக் பள்ளியில் மழலையர் குழந்தைகளுக்கான பட்டமளிப்பு விழா நடைபெற்றது, இறை வழிபாட்டுடன் இந்நிகழ்ச்சி தொடங்கியது. விழாவிற்கு அதியமான் கல்வி நிறுவனங்களின் செயலர் ஷோபா திருமால் முருகன் தலைமை தாங்கி பட்டங்கள்வழங்கிவாழ்த்த வருகை புரிந்த அதியமான் கல்வி நிறுவனங்களின் நிறுவனர் சீனித் திருமால் முருகனை மாணவர்கள் அணிவகுத்து வரவேற்றினர்,

யுகேஜி முடித்து முதல் வகுப்பிற்குச் செல்லும் மாணவ மாணவிகளுக்கான பட்டங்கள் வழங்கப்பட்டன, தங்கள் கல்வி பயணத்தின் அடுத்த கட்டத்திற்கு செல்லும் மாணவர்கள் எடுத்தஉறுதிமொழிநிகழ்வு அனைவரையும் கவர்ந்தது, எல் கே ஜி மற்றும் முதலாம் வகுப்பு மாணவர்களின் வண்ணமிகு கலை நிகழ்ச்சிகள் பெற்றோர்களையும் பார்வையாளர்களையும் மகிழ்வித்தன, விழாவின் நிறைவில் பட்டம் பெற்ற மாணவர்கள் முதலாம் வகுப்பிற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர், அவர்களை முதலாம் வகுப்பு ஆசிரியர்கள்இனிப் புகள் வழங்கி வரவேற்றினர், இந்நிகழ்ச்சியில் பள்ளியின் முதல்வர் லீனா ஜோஸ் சந் துணை முதல்வர் தோஷ், கிண்டர் கார்டன் பொறுப்பாளர் ரெபேக்கா , கல்வி ஒருங்கிணைப்பாளர் செல்வி ராதா நளினி, மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர், இவ்விழாவிற்கு அனைத்து ஏற்பாடுகளையும் பள்ளி நிர்வாகம் சிறப்பாக செய்து இருந்தது,

## கடன் வழங்குவதாக கூறி ரூ.30 லட்சம் மோசடி

# நிதி நிறுவன பணியாளர்கள் டி.ஐ.ஜி. அலுவலகத்தில் புகார்

தஞ்சாவூர். ஏப்.1



தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் செயல்படும் தனியார் நிதி நிறுவனம் கடன் வழங்குவதாக வாடிக்கையாளர்களையும், வேலை பார்த்தவர்களையும் ஏமாற்றி விட்டதாக அங்கு பணியாற்றிய பணியாளர்கள்ராஜாகிட்டப்பா என்பவரது தலைமையில் தஞ்சாவூர்சரக டி.ஐ.ஜி. அலுவலகத்தில் புகார் மனு அளித்தனர்.

அம்மனுவில் கூறியிருப்பதாவது, தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் தனியார் நிதி நிறுவனம் பொதுமக்களுக்கு தனி நபர் கடன் ரூ. 30 ஆயிரம் வழங்குவதாக அறிவித்தனர். இதை18 தவணையாக மாதந்தோறும் செலுத்த வேண்டுமெனவும், உறுப்பினர் கட்டணம் ரூ 500/= செலுத்த வேண்டும் எனவும் அறிவித்திருந்தது.இதற்காக ஆதார், பான் அட்டைகள் உள்ளிட்டவற்றை வாங்கி நிதி நிறுவனத்துக்கு கொடுத்தோம்.

மாவட்டத்தில் கும்பகோணம், மாரியம்மன்கோயில்,செங்கிப்பட்டி, திருக்காட்டுப்பள்ளி என பல இடங்களில் செயல்பட்ட இந்த நிதி நிறுவனம் சார்பில் 6 ஆயிரம் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு ரூ.30 லட்சம் ரொக்கத்தைப் பெற்று நிதி நிறுவனத்திடம் வழங்கினோம். நிதி நிறுவனம் கூறியபடி கடன் தொகை தரவில்லை. பணம் கொடுத்தவர்கள் நாள்தோறும் நிறுவனங்களுக்கு வந்து எங்களை மிரட்டி ரொக்கம் மற்றும் ஆதார் உள்ளிட்ட ஆவணங்களைக் கேட்டு நெருக்கடி கொடுத்துவருகின்றனர்.ரொக்கத்தைப் பெற்றுக் கொண்ட நிதி நிறுவன உரிமையாளர்களை நாங்கள் தொடர்பு கொள்ள முடியவில்லை. இதேபோல 100க்கும் அதிகமான பணியாளர்களுக்கு 2 மாதங்களாக ஊதியம் தரவில்லை.

எனவே, மோசடியாக பெறப்பட்ட தொகையை மீட்டுத்தர வேண்டும். மேலும், பொதுமக்களின் ஆவணங்களைக் கைப் பேசி செயலியில் பதிவேற்றம் செய்துள்ளதால், அதைவேறுமுறை கேடுகளுக்கு பயன் படுத்தக் கூடும் என்பதால்,நிதி நிறுவனத்தினர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

# தஞ்சாவூரில் குருத்தோலை ஞாயிறு பவனி

தஞ்சாவூர் ஏப்.1



தஞ்சாவூரில் நடந்த குருத்தோலை ஞாயிறு பவனி திரளான கிறிஸ்தவர்கள் பங்கேற்றனர். . .கிறிஸ்தவர்களின் பண்டிகளுள் முக்கியமான பண்டிகை ஆகும். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு 3ம் நாள் உயிர்த்தெழு வதை கொண்டாடும் வகையில் உயிர்ப்பு பெருவிழாவாக இந்த பண்டிகை கொண்டாடப் படுகிறது.. இந்த ஈஸ்டர் பெருவிழாவிற்கு முன் 40 நாட்கள் தவக்காலமாக அனுசரித்து வருகின்றனர். இந்த 40 நாட்கள் தவகாலம் சாம்பல் புதனுடன் கடந்த மாதம் 18ந்தேதி தொடங்கியது. .. தொடர்ந்துகிறிஸ்தவர்கள் தவக்காலத்தை கடை பிடித்து வருகின்றனர் ஈஸ்டர் பண்டிகைக்கு முந்தைய வாரம் குருதோலை ஞாயிறாக கடைபிடிக்கப்படுகிறது இந்த நாளில் கிறிஸ்தவ மக்கள் குருதோலைகளை கையில் ஏந்தி பவனியாக சென்று ஆலயங்களில் வழிபடுவது வழக்கம். இந்த ஆண்டுக்கான குருத்தோலை ஞாயிறு கொண்டாடப்பட்டது . அதன்படி தஞ்சாவூர் மறைமாவட்டத்தின் தலைமை பீடமாக விளங்கும் திரு இருதய பேராலயத்தில் குருத் தோலை ஞாயிறு வழிபாடு நடைபெற்றது. முன்னதாக புனித வியாகுலமாதா ஆலய முகப்பில் மறைமாவட்ட விவிலிய பணிக்குழு செயலாளர் பால்ராஜ் அடிகளார் தலைமையில் கூட்டுப்பாடல் திருப்பலி நடந்தது. அதை தொடர்ந்து தஞ்சாவூர் மறைமாவட்ட ஆயர் டி.சகாயராஜ் தலைமையில் குருத்தோலைகள் புனிதம் செய்யப்பட்டு, குருத்தோலை பவனி நடந்தது. இந்த பவனி யானது கல்லுக்குளம் ரோடு, பூக்கார வீர வாண்டையார் தெரு, மேரீஸ் கார்னர், நாஞ்சிக் கோட்டை சாலை வழி யாக திரு இருதய பேராலயம் வந்தடைந்தது. .இந்த பேராலய பங்குதந்தை பிரபாகர், உதவி பங்குதந்தையர்கள் அரவிந்த், ஜெனித்லாரன்ஸ். ஆயரின் செயலாளர் ஷெரில் கியூபர்ட், தஞ்சாவூர் பல்நோக்கு சமூக சேவை சங்கத்தின் இயக்குனர் ஆர்.கே. அடிகள் மற்றும் ஏராளமான கிறிஸ்தவர்கள் கையில் குருத்தோலைகளை ஏந்தி சென்றனர். . இதே போல் தஞ்சாவூர் சிவகெங்கை பூங்கா கோட்டை சி.எஸ்.ஐ கிறிஸ்துநாதர் ஆலையம், தஞ்சாவூர் குழந்தை இயேசு ஆலயம், தஞ்சை சின்னையாபாளையம் ரோட்டில் உள்ள ஐ .இ. எல்.சி வளாகம், மற்றும் அனைத்து கிறிஸ்தவ ஆலயங்களிலும் குருத்தோலை ஞாயிறு பவனி நடைபெற்றது.





திருச்சி திருவெறம்பூர் சட்டமன்ற திமுக வேட்பாளர் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பெல் தொ. மு. ச நிர்வாகிகளை சந்தித்து திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதியில் உதயசூரியன் சின்னம் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வேண்டும் அதற்கு நாம் அனைவரும் அயராது உழைப்போம் என உறுதிமொழியினை அனைவரும் உடனும் இணைந்து எடுத்துக்கொண்டு தொழிற்சங்கத்தினருக்கு தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டுதனது பரப்புரையைதொடங்கினார்

## நாகர்கோவில் அருகே

# வீட்டில் புகுந்த கும்பலை தடுத்த தாய், மகன், மகள் மீது சரமாரி தாக்குதல்

நாகர்கோவில், ஏப்.1

நாகர்கோவில் அருகே உள்ள பறக்கை பகுதியைச் சேர்ந்தவர் புஷ்பாகரன். இவரது மனைவி சித்ரா (39). நேற்று முன்தினம் நள்ளிரவு சுமார் 12:30 மணியளவில், இவர்களது வீட்டு அருகே ஒரு கும்பல் தகராறு செய்து கொண்டிருந்தது.

அப்போது அதே பகுதியைச் சேர்ந்த ஆகாஷ் மற்றும் முகமது சமீர் ஆகியோரை ஒரு கும்பல் துரத்தி வந்துள்ளது. உயிருக்கு பயந்து அவர்கள் சித்ராவின் வீட்டுக்குள் நுழைந்தனர். அவர்களைப் பின்தொடர்ந்து வந்த 4, 5 பேர் கொண்ட கும்பல், வீட்டின் கதவை உடைத்து உள்ளேபுகுந்துஅங்கிருந்தவீட்டின்பாத்ரூம்கதவு,பீரோ செல் போன் போன்ற பொருட்களை அடித்து நொறுக்கியது.

இதைத் தடுக்க முயன்ற சித்ரா, அவரது மகன் சுனில் மற்றும் மகள் ஜெயந்தி ஆகியோரை அந்த கும்பல் சரமாரியாகத்தாக்கி கொலை மிரட்டல் விடுத்தது. இந்த மோதலில் சித்ரா உள்ளிட்ட 3 பேரும் பலத்த காயமடைந்தனர். மேலும் வீட்டின் கதவு, பீரோ மற்றும் செல்போன்கள் சேதமடைந்தன.

இது குறித்து சித்ரா சுசீந்திரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அளித்த புகாரின் பேரில், சுசீந்திரம் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் தனிஷ் லியோன் விசாரணை நடத்தினர். இதில் தொடர்புடைய செல்வகுமார், சக்தி, அஸ்வின், வேலு ஆகிய 4 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மருத்துவமனை மற்றும் மருத்துவர்களுக்கான பாதுகாப்பு சட்டத்தை கடுமையாக்க வேண்டும்

### திருப்பூரில் இந்திய மருத்துவ சங்கத்தின் புதிய கிளை தீர்மானம்




திருப்பூர்: ஏப். 1

திருப்பூரில் இந்திய மருத்துவ சங்கத்தின் நியூ திருப்பூர் கிளை ஆலோசனைகூட்டம் பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள தனியார் அரங்கத்தில் ஐ.எம்.ஏ. நியூ திருப்பூர் தலைவர்.ஸ்ரீசரண் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் இந்திய மருத்துவ சங்கத்தின் மாநில தலைவர் ஸ்ரீதர் சிறப்பு விருந்தினராக விருந்தினராக கலந்து கொண்டு செய்தியாளர்களிடம் பேசுகையில். இந்திய மருத்துவ சங்கத்தில் இந்தியா முழுவதும் 10 லட்சம் டாக்டர்களும், தமிழ்நாட்டில் மட்டும் 184 கிளைகளும், அதில் 2 லட்சம் டாக்டர்களும் உள்ளனர் என்றும் 2026 சட்டமன்ற தேர்தலில் அனைத்து கட்சிகளும் ஏராளமான டாக்டர்களை வேட்பாளர்களாக அறிவித்துள்ளனர். இதற்கு சங்கத்தின் சார்பில் நன்றியும், பாராட்டும் தெரிவித்துக் கொள்வதாகவும் நுகர்வோர் சட்டத்தில் இருந்து எங்களுக்கு பாதுகாப்பு அளிப்பது, மருத்துவமனை வாரிய சட்டத்தில் உள்ள சில சரத்துக்களை நீக்க வேண்டும்.என்றும் மருத்துவமனைகளுக்கான மின்கட்டணம் தற்போது வணிக பிரிவில் இருப்பதால் அதை சிறு, குறு தொழில் பிரிவில் மாற்ற வேண்டும். மருத்துவமனை மற்றும் மருத்துவர்களுக்கான பாதுகாப்பு சட்டத்தை கடுமையாக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். தொடர்ந்து புதிய நிர்வாகிகளுக்கு பொன்னாடை அணிவித்து நினைவு பரிசுகளும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் ஏராளமான டாக்டர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர்.




சட்டமன்ற தேர்தலில் திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூர் சட்டமன்ற தொகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் திராவிட முன்னேற்ற கழகத்தின் வேட்பாளராக போட்டியிடும் சீ.கதிரவன். கழக முதன்மைச் செயலாளர் கே.என் நேரு மற்றும் தனலட்சுமி சீனிவாசன் குழும நிறுவனத்தலைவர் .அ.சீனிவாசன் அவர்களின் தலைமையில் மண்ணச்சநல்லூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் திருச்சி வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டிதியாகராஜன், ஒன்றிய செயலாளர்கள்,நகர செயலாளர், கிளை செயலாளர்கள் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# சட்டசபை தேர்தலில் 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தி குறும்படம்

## கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தொடங்கி வைத்தார்.

தஞ்சாவூர் ஏப். 1




தேர்தலில் 100 சதவீதம் வாக்களிக்க வலி யுறுத்தி குறும்படத்தினை கலெக்டர் பிரியங்கா பங்கஜம் வெளியிட்டார். .தஞ்சாவூர் மாவட்டத்தில் தேர்தல் தூதர்களாக அறிவிக்கப் பட்டுள்ள தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை வடிவில் மெய்யன் , மெய்யாள் ஆகியோர்களை கொண்டு ஏஐ தொழில் நுட்பத்தில் மூலம் தேர்தல் விழிப்புணர்வு குறும் படம் தயாரிக்கப்பட்டுள்ளது .இந்த குறும்படம் தஞ்சாவூர் புதிய பஸ் நிலையம் அருகே உள்ள வெற்றி திரையரங்கில் திரையிடப்பட்டது இதனை கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தொடங்கி வைத்தார் அதன்படி குறும்படம் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள28 திரையரங்கு களிலும் திரையிடப்படப்படுகிறது. இந்த குறும்படத்தில் மெய்யின் குரல் என்ற தலைப்பில் பல்வேறு தரப்பினர்கள் பேசுவது போல் உருவகப்படுத்தி தேர்தல் தொடர்பாக அனைவரும் 100 சதவீதம் நேர்மையாக வாக்களிக்க வேண்டுமென விழிப் புணர்வு ஏற்படுத்தப்பட்டது. தேர்தல் தொடர் பாக ஏற்படும் சந்தேகங்களுக்கும் விதிமுறை மீறல்கள் தொடர்பான புகார்களுக்கும் செயலி மூலமாக புகார் செய்வது தொடர்பாகவும் விளக்கம் அளிக்கப்பட்டது . :மேலும் மாற்றுத் திறனாளிகள், 85 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் வீட்டிலிருந்து வாக்களிக்கும் வகையில் வசதிகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. மேலும் செய்தி மக்கள் தொடர்பு துறையின் அதி நவீன மின்னணு திரை வாகனத்தின் மூலம், அனைத்து கிராமங்கள் மற்றும் நகர்புற பகுதி களில் உள்ள மக்களிடையே குறும்படம் சென்றடையும் வகையில் பெரிய கோவில், பழைய பஸ் நிலையம் ஆகிய இடங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் குறும்படம் திரையிடப் பட்டது . இதனை கலெக்டர் பிரியங்கா பங்கஜம் பார்வையிட்டார் .. .இதில் மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், பயிற்சி உதவி கலெக்டர் கார்த்திக் ராஜா, சப் கலெக்டர் சவுமியா, செய்தி மக்கள் தொடர்பு அதிகாரி பாரதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அ.தி.மு.க. திமுக, கூட்டணிக்கு அளிக்கும் வாக்கு வீணானது

திருப்பூர், ஏப்ரல்01



வெற்றி இலக்கை எட்ட முடியாது என்பதால் அ.தி.மு.க.தி.மு.க.கூட்டணிக்கு அளிக்கும் வாக்கு வீணானது' என்று முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் கூறினார்.

திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் த.வெ.க. வேட்பாளர் சத்தியபாமா வேட்புமனுதாக்கல் செய்தார். இதில் கலந்து கொண்ட முன்னாள் அமைச்சரும், த.வெ.க. நிர்வாகக்குழு தலைமை ஒருங்கிணைப்பாளருமான செங்கோட்டையன் நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் நல்லாட்சி அமைய திரையுலகத்தில் உச்சத்தை விட்டுவிட்டு விஜய் அரசியலுக்கு வந்துள்ளார். மக்கள் நினைப்பதை நிறைவேற்றகளம் இறங்கி உள்ளார்.

தி.மு.க.வை வீழ்த்த த.வெ.க.வால் தான் முடியும். அந்த கருத்தின் அடிப்படையில், எதிர்கால தமிழகத்தை உருவாக்க சோதனைகளை தாண்டி வெற்றி இலக்கை எட்டிவிட்டோம். அ.தி.மு.க. தி.மு.க. கூட்டணிக்கு போடும் ஓட்டு வீணானது.

அவர்களால் வெற்றி இலக்கை எட்ட முடியாது.

ஆனால் தி.மு.க. வினரின் கூட்டம், ரோடுஷோவுக்கு தடையில்லை. எங்களுக்கு மட்டும் 51 விதிகளை காட்டி மக்களை சந்திக்க விடாமல் செய்கின்ற னர். 1991ல் ஜெயலலிதா பர்கூர். காங்கயம் என 2 தொகுதிகளில் போட்டியிட்டார். இதே போல் விஜய்யும் 2 தொகுதிகளில் போட்டியிடு கிறார்.புதிதாக களம் காணும் போது, ஆட்சியாளர்களால் ஏதாவது குறைபாடுகள் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக தலைவர்கள் 2 இடங்களில் போட்டியிடுவது வழக்கம்தான். இவ்வாறு செங்கோட்டையன் கூறினார். அனுமதி மறுப்பு,, காலை 4 மணிக்கே மக்கள் த.வெ.க.வுக்கு ஓட்டுப்போட வந்து விடுவார்கள். வாக்கு எண்ணிக்கையின் போது பத்து மணிக்கு வெற்றி பெற்று விட்டோம் என்ற செய்தி வந்துவிடும்.. த.வெ.க. தலைவர் விஜய்யின் பிரசாரத்துக்கு அனுமதி மறுப்பு, வேட்பாளர் அறிமுகத்துக்கு தடை, உள்ளரங்க கூட்டத்துக்கு தடை என வருகிறது ஆனால் திமுகவினரின் கூட்டம் ரோடு ஷோவுக்கு தடை இல்லை எங்களுக்கு மட்டும் 51 விதிகளை காட்டி மக்களை சந்திக்க விடாமல் செய்கின்றனர் விஜயின் சுற்று பயணம் மாற்றத்தை உருவாக்கும்.. வேட்புமனு தாக்கல் 15 வேலம்பாளையம் மண்டல அலுவலகத்தில் நடந்தது. அலுவலகத்துக்கு வந்த அனைவரையும் போலீசார் மெட்டல் டிடெக்டர் மூலம் சோதனை செய்தனர். செங்கோட்டையனைஅவ்வாறுசோதனை செய்தபோது அவர், கையை உதறிவிட்டு சென்றார்.

# துறையூரில் முதல் நபராக வேட்புமனு தாக்கல் செய்த நாதக வேட்பாளர்

திருச்சி, ஏப். 1

திருச்சி மாவட்டம் துறையூர் வட்டாட்சியர் அலுவலகத்தில், துறையூர் சட்டமன்ற தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கௌசல்யா சுரேஷ்குமார் தேர்தல் நடத்தும் அலுவலரிடம்தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். இவர் துறையூர் அருகே காளிப்பட்டி ஜீவா நகரைச் சேர்ந்தவர் மற்றும் தனியார் பள்ளி ஆசிரியராக பணிபுரிகிறார். இவருக்கு சுரேஷ்குமார் என்ற கணவரும் இரண்டு ஆண் குழந்தைகளும் உள்ளனர். கட்சிநிர்வாகிகளுடன்அவர்வட்டாட்சியர்



அலுவலகத்திற்கு வந்து மனுவை சமர்ப்பித்தார்.

# சாமிதோப்பு காமராஜ் வித்யாலயா பள்ளி ஆண்டு விழா

தென்தாமரைகுளம்., ஏப். 01




சாமிதோப்பு காமராஜ் வித்யாலயா ஆங்கிலப்பள்ளி 34 ஆவது ஆண்டு விழா நடந்தது விழாவுக்கு பள்ளி நிறுவனர் தலைவர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். ஆசிரியை வளர்மதி வரவேற்று பேசினார் முதல்வர் தங்க நித்தியா ஆண்டறிக்கை வாசித்தார்.நிர்வாக அதிகாரி அஜித்ரா, பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் அம்பிகா ஆகியோர் வாழ்த்தி பேசினர். சிறப்பு விருந்தினரை பள்ளி துணை தலைவர் டாக்டர் ஆர். தர்ம ரஜினி அறிமுகம் செய்து வைத்து பேசினார். சிறப்பு விருந்தினராக அகஸ்தீஸ்வரம் விவேகானந்தா கல்லூரி நூலகர் டாக்டர் அ.சங்கர் கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளும் சிறந்த ஆசிரியர்களுக்கு விருதுகளும் வழங்கி சிறப்புரை ஆற்றினார். முடிவில் பள்ளி துணை முதல்வர் நித்தியா நன்றி கூறினார். தொடர்ந்து பள்ளி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. விழா ஏற்பாடுகளை விழா குழுவினர் செய்திருந்தனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.